# யாபேசின் குடிமக்கள் நன்றியுடைமை விவரிக்கப்படுகின்றது

## (31:11-13)

*இல்லினாய்ஸ் என்ற இடத்தில் இருந்த விவசாயி ஒருவர், டென்னஸ்ஸீயின் நாஷ்வில் என்ற இடத்தில் படைவீரர் ஒருவருடைய கல்லறையில் முழந்தாளிட்டுக் கொண்டிருக்கக் காணப்பட்டார். அங்கு அவரது மகன் புதைக்கப்பட்டிருக்கின்றாரா என்று கேட்ட பொழுது, "இல்லை, அவன் எங்கள் நகரில் வாழ்ந்து கொண்டுள்ளான். அவனது கல்லறையைக் காண்பதற்காக நான் இங்கு வந்துள்ளேன்'' என்று அவர் பதிலளித்தார். அதைக் கவனித்தவர், "ஒருவேளை இங்கு வர இயலாத அவரது தந்தைக்குப் பதிலாக நீங்கள் இங்கு வந்தீர்களோ?" என்று கேட்டார். அதற்கு இவர், "ஆம், நான் இங்கு வருவது குறித்து இவரது தந்தை மகிழ்வடைந்தார், ஆனால் நான் எனக்காகவே இங்கு வந்தேன். எனக்கு ஏழு பிள்ளைகள் இருக்கின்றார்கள், அவர்கள் எல்லோரும் சிறுவர்கள், எனது மனைவி சுகவீனமாய் இருக்கிறாள். நான் படையில் சேர்க்கப்பட்டிருந்தேன். பண்ணை வேலையைக் கவனிக்க ஒருவரும் இல்லை, என்னால் (எனக்குப்) பதில் வேலை செய்ய ஆள் ஒருவரைக் கூலிக்கு அமர்த்த இயலவில்லை. மாதந்தோறும் நான் பெறுகிற பதிமூன்று டாலர்கள் என் குடும்பத்திற்கு உணவு தரப் போதாது. நான் சென்றாக வேண்டும், என் குடும்பம் துன்பப்பட வேண்டும் என்று காணப்பட்டது. முகாமுக்கு நான் சென்று அறிக்கை தர வேண்டிய நாளுக்கு முந்தின நாள், எனது அண்டை வீட்டாரின் மகன் வந்து, எனக்காக அவன் யுத்தத்திற்குச் செல்லுவதாக வாக்களித்தான். அவன் தன்னை யாரும் சார்ந்திருக்கவில்லையென்றும் எனக்குப் பதிலாகத் தான் செல்லுவதே மிகவும் சிறந்தது என்றும் கூறினான். அவ்வாறே அவன் சென்றான், சிக்காமவுகா என்ற இடத்தில் அவன் காயம் பட்டான். அவன் நாஷ்வில்லில் உள்ள மருத்துவ மனையொன்றில் சேர்க்கப்பட்டு, இங்கேயே இறந்தான். நான் அவனது கல்லறையைக் கண்டு பிடித்து விட்டேன்'' என்று கூறினார். இதன் பிறகு அந்த விவசாயி கல்லறையின் தலைகல்லில் "எனக்காக இறந்தார்" என்று எழுதினார்.*

நன்றியுடமை என்பது தேவனைப் பின்பற்றுகிறவர்களுக்கு மிகவும்

*நெருக்கமான அடையாளமாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் ஒரு முறையல்ல ஆனால் பலமுறை, கிறிஸ்தவர்கள் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளார்கள்:*

> *... இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் (கொலோ. 3:15ஆ).*
>
> *எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்கிறதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தெச. 5:18).*
>
> *நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும் (1 தீமோ. 2:1).*

*இந்தத் தெளிவான கட்டளைகள் இருந்தும்கூட, நன்றி நிறைந்த இருதயங்கள், கவலைக்குரிய வகையில் குறைவுபட்டுள்ளன!*

*நன்றி நிறைந்த நிலைப்பாடு என்பது எப்பொழுதுமே இதயத்தைக் குளிர்விப்பதாக உள்ளது. "உங்களுக்கு நன்றி" என்ற எண்ணப்போக்கு இதைக் காணும் யாவருக்கும் மகிழ்வைக் கொண்டு வருகிறது. யாபேஸ்-கிலெயாத்தில் இருந்த குடிமக்கள் இந்த எண்ணப்போக்கை விவரிக்கின்றார்கள், இவர்களின் நன்றியுணர்வு 1 சாமுவேல் புத்தகத்தை முடித்து வைக்கின்றது.*

*யாபேஸ் என்பது யோர்தானின் மேற்குப் பகுதியில் இருந்த ஒரு சிறிய நகரமாகும். இந்த ஒரு நகரம் மாத்திரமே பென்யமீன் கோத்திரத்திற்கெதிராக நடந்த உள்நாட்டு யுத்தத்தில் பங்கேற்காததாக இருந்தது (நியா. 20:13). அந்தக் கோத்திரம் ஏறக்குறைய ஒழிக்கப்பட்ட பின்பு, பென்யமீன் கோத்திரத்தின் (எஞ்சியிருந்த ஆண்களுக்கு மனைவியாக்கும்படிக்கு யாபேஸில் இருந்து பெண்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்) (நியா. 21:8-15). இவ்விதமாக, இவ்விருசாராருக்கும் இடையில் நீண்ட நெருங்கிய தொடர்பு நிலவியது. சவுலின் முன்னோர்களில் சிலர், இந்த நகரின் குடிமக்களாய் இருக்கச் சாத்தியமிருந்தது.*

*உள்நாட்டு யுத்தம் மற்றும் கலப்புத் திருமணங்களின் காலம் முடிவுற்று முன்னூறு ஆண்டுகள் சென்ற பிறகு, பென்யமீனின் தலைநகரான கிபியாவுக்கு ஒரு ஒப்பந்தம் வந்து சேர்ந்தது. அந்த ஒப்பந்தமானது, அம்மோனியனான நாகாஸிடமிருந்து நம்பிக்கையிழந்த நிலையில் உதவியை நாடியது. யாபேஸ் சரண் அடைந்தால், நாகாஸ் ஒவ்வொரு மனிதரின் வலது கண்களையும் பிடுங்கிப் போடுவதாகக் கூறினான். இந்த உருவச் சிதைவானது, வலது கண்மட்டும் காணும்படிக்கு, அவ்விதமாக கேடயமானது ஒவ்வொருவரின் இடது கண்ணை மறைக்கும் வகையில் எடுத்துச் செல்லப்பட்டதால் எல்லா ஆண்களையும் யுத்தத்திற்கு தகுதியற்றவர்களாக்கிவிடும், வலது கண் பார்வையை இழந்தால், யுத்தத்தில் ஆண்கள் "கபோதி"களாய் இருப்பார்கள். யாபேஸ் சரணடைய மறுத்து*

*விட்டால், நாகாஸ் அந்த நகரைச் சுற்றிலும் முற்றுகையிட்டு ஒவ்வொரு வரையும் அழித்துப் போடுவான்.*

*இந்த விஷயத்தைச் சவுல் கேள்விப்பட்ட போது, தேவனால் தைரியம் பெற்று, அவர் ஒரு படையை ஒன்றுகூட்டினார். (அவருக்கு) வெற்றி தரப்பட்டது, இஸ்ரவேலின் அரசர் என்ற வகையில் சவுலின் நிலைப்பாடு திடமாயிற்று.*

*யாபேஸின் வரலாறு இத்துடன் முடிவதில்லை. நாற்பது ஆண்டுகள் கடந்து சென்ற வேளையில், சவுலின் வெற்றிகள் அதிகரித்தன, அதே போலவே அவரது வல்லமை, நிலைப்பாடு மற்றும் மேட்டிமை ஆகியவையும் அதிகரித்தன. அவரது முந்திய தாழ்மை தொலைந்து போனது, அவர் வெறிகொண்ட சர்வாதிகாரியாக வளர்ந்திருந்தார். கில்போவா மலையில் சவுலின் முடிவு வந்து சேர்ந்தது, மற்றும் அவரது மரணமானது, பிலிஸ்தியர்கள் தங்கள் விக்கிரகக் கோயில்களில் சந்தோஷம் கொண்டாடுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பைத் தந்தது (31:6-10). யாபேஸின் மக்கள், சவுல் மற்றும் அவரது மகன்களின் உடல்கள் அவமதிக்கப்பட்டுக் கிடப்பதை அனுமதிக்க மறுத்து விட்டனர். அவர்கள் பெத்சானை நோக்கி தைரியமாய் அணிவகுத்துச் சென்று, அந்த உடல்களை எடுத்து, அவற்றுக்கு முறைப்படி இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினார்கள் (31:11-13). அற்புதமான நன்றியுணர்வின் இச்செயல்விளக்கம் இந்நகரத்தைத் தனிச்சிறந்ததாக்குகின்றது!*

## நன்றியுடைமையின் எண்ணப்போக்கு

*யாபேஸ்-கீலேயாத்தின் இந்த வீரக் குடிமக்களில் இருந்து நாம், பின்வரும் பண்பியல்புகளினால் அடையாளப்படுத்தப்பட்ட நன்றியுடைமையைக் காண்கின்றோம்.*

*<u>நன்றியுடமை என்பது நினைவுகூருதலில் இருந்து எழுகின்றது</u> (11:11). சவுல் யாபேஸுக்கு உதவி செய்து நாற்பது ஆண்டுகள் ஆகியிருந்தது, ஆனால் அவரது செயலானது நீண்ட காலமாக வளமாய் நினைக்கப்பட்டிருந்தது. இன்றைய நாட்களில் பலர், இரக்கமான செயல்களை விரைவில் மறந்து போய் தவறுகளை மட்டும் நினைவில் வைக்கின்றார்கள்! நமது பிரயோஜனத்திற்காக நற்செயல்கள் நிகழ்த்தப்படும் பொழுது, அதற்குப் பதிலாக ஒரு எளிய ''உங்களுக்கு நன்றி'' என்ற வார்த்தையை(யாவது) கூற நாம் ஒருக்காலும் தவறி விடக் கூடாது. நல்ல சகோதரர்கள் நமக்கு உதவுகையில் நாம் அவர்களுக்கு நன்றியறிதலை வெளிப்படுத்த வேண்டும்:*

> *உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்தமனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன் (2 தீமோ. 1:4, 5).*

*தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர் களை நீங்கள் நினைத்து அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள் (எபி. 13:7).*

*நமக்கு தேவனால் அற்புதமான கொடைகள் கொடுக்கப்படும் பொழுதும் நாமும் நன்றி செலுத்த வேண்டும்:*

*கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன் படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது (சங். 103:17, 18).*

*அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும், அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள் (சங். 105:6).*

*நன்றியுடைமை நமது பங்கில் சொந்த முயற்சிகளைக் கொண்டுள்ளது (31:12). யாபேஸின் மக்கள், சவுலின் உடலை மீட்பதற்கு தங்கள் உயிரைப் பணயம் வைத்து சக்தியைச் செலவிட்டார்கள். அவர்கள் தங்களையே அர்ப்பணித்திருந்தார்கள். சகோதரர்கள் நன்றியுடமையைக் காட்ட முயற்சிகளை மேற்கொள்வதில்லை என்பதே நன்றியுடைமை செயல் விளக்கப்படுத்தப்படாததற்கு முதல் காரணமாக உள்ளது! நன்றியுடைமை காண்பிக்கப்பட வேண்டும்!*

*நன்றியுடைமை நிலையானதாயிருக்க வேண்டும், அது ஒருக்காலும் நிபந்தனைக்குரியதாக இருக்க கூடாது (31:12). சவுலின் வெளியரங்கமான புகழ்ச்சி அழிக்கப்பட்டிருந்தது; அவர் தம் வாழ்வின் இறுதிப் பகுதியில் சித்தம் கலங்கிய மனிதரென்று அறியப்பட்டிருந்தார். வெறித்தனமான சர்வாதிகார ஆளுகை அவரது அரண்மனையை வழிநடத்திற்று. அவர் அரசர் என்ற வகையில் தமது செல்வாக்கின் முந்தைய சிகரங்களில் இருந்து வீழ்ந்து போயிருந்தார். சவுல் இறந்தவராக, கைவிடப்பட்டவராக, உருச் சிதைக்கப் பட்டவராக, தேவனற்றவர்களால் இகழ்ந்து பேசப்பட்டவராக இருந்தார், ஆயினும் இந்த நகரத்தார் நன்றியுடைமையைக் காண்பித்தார்கள்! நன்றியுடைமை என்பது ஒருக்காலும் ஒரு நபரின் அந்தஸ்தைக் கொண்டு நிபந்தனை விதிப்பதாயிருக்கக் கூடாது. (அந்தஸ்து இருப்பவர்களுக்கு மட்டும் நன்றியுடைமை காண்பித்தல் என்ற நிலை இருக்கக் கூடாது.) ஒருவரிடத்தில் குறைவுகள் காணப்பட்டாலும் (அவர் நமக்குச் செய்த நன்மைக்காக) மதிப்பு காண்பிக்கப்பட வேண்டும். ஒருவர் பிறரை "விரும்ப" வில்லை என்பதால் மாத்திரமே, நன்றியுடைமையின் வெளிப் பாடுகளைக் காண்பிக்காமல் வைத்துக் கொள்வது என்பதைக் கண்ணோக்குதல் எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது.*

*நன்றியுடைமை என்பது முழுமையாயிருக்க வேண்டும் (31:12ஆ, 13)*

*யாபேசின் மக்கள் செய்யக் கூடிய எல்லாவற்றையும் செய்தார்கள். நன்றியை வெளிக்காட்டுவதில் நாம் முழுமையாய் இருக்கிறோம் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்வோமாக. ஒரு ''அடையாளமான'' முயற்சி போதுமானதாய் இருப்பதில்லை.*

*நன்றியுடைமையானது ஒரு மென்மையான பிரியத்தை வெளிப் படுத்துகின்றது (31:13). இந்தக் குடிமக்கள் சவுலின் மரணத்தினிமித்தம் துக்கத்தை வெளிப்படுத்தினார்கள். இவர்கள் அவர் மீது விசேஷித்த வகையில் பிரியமாயிருந்தார்கள், இந்த ஆழமான உணர்வுப்பூர்வமான இணைவு தெளிவானதாக உள்ளது. நன்றியுடைமை என்பது மென்மையான பிரியத்தையும் ஆழமிக்க உணர்வுப் பிணைப்புக்களையும் வெளிப் படுத்துகின்றது (இ.வ. பிலி. 4:18). கிறிஸ்தவர்கள் தங்களின் இருதயங் களுக்குள்ளாகவே இருக்கும் அன்பின் காரணமாக நன்றியுடைமையைக் காண்பிக்கும்படி எதிர்பார்க்கப் படுகின்றார்கள் (1 யோவா. 4:19-21).*

*நன்றியுடைமை என்பது தானாக எழுவதாயிருக்கின்றது (31:12). சிறப்பான வேண்டுகோள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை; எந்த ஒரு பலனும் கிடைக்கும் என்று காணப்படவில்லை. மக்கள் தூண்டி விடப் படாமலேயே, வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படாமலேயே செயல் பட்டார்கள். இவ்விதமானதே நன்றியுடைமையின் ''உண்மையான அடையாளமாக'' உள்ளது - நன்றியுடைமையைக் காண்பிக்கும்படி ஒருவர் உந்திவிடப் படும்பொழுது அல்லது வற்புறுத்தப்படும் பொழுது, எழுச்சி/ ஊக்கம் முழுவதும் இழந்து போகப்படுகிறது. வற்புறுத்தப்பட்ட நன்றி யுணர்வில், அன்பு என்பது ஊக்குவிக்கும் பொருளாயிருப்பதில்லை, தேவன் இதில் ஒருக்காலும் பிரியமாய் இருப்பதில்லை!*

*இவர்களின் நன்றியுடைமையானது முற்றிலும் அன்பினால் தூண்டப் பட்டது, மற்றும் ஊழியம் செய்ததில் தெளிவாய் செயல்விளக்கப் படுத்தப்பட்டது.*

## வலிவார்ந்த ஒரு பாடம் சுட்டிக் காண்பிக்கப்பட்டது

*இந்த வரலாற்று எடுத்துரைப்பிலிருந்து நன்றியுடைமையின் முக்கியமான ஒரு அம்சம் நமக்குக் காண்பிக்கப்படுகின்றது - இது அமைதி யாகவும் வெளிப்படுத்தப்படாமலும் இருந்துவிட்டால், இது பயனற்ற தாகின்றது!*

*1860ம் ஆண்டில், மிச்சிக்கன் ஏரியில், புயல் வீசிய இரவு வேளை யொன்றில், பக்கச் சக்கரம் கொண்ட நீராவி எஞ்சின் படகு ஒன்றை மரம் ஏற்றிச் செல்லும் சிறு கப்பல் மோதினது. அதிலிருந்த 393 பயணிகளில் 279 பேர், அந்த நீராவிப்படகு இல்லினாய்ஸின் வின்னெட்கா கரையிலிருந்து ஒரு மைல் தொலைவில் (ஏரிக்குள்) மூழ்கிய பொழுது (ஏரியில்) அமிழ்ந்து போனார்கள். வடமேற்கு பல்கலைக் கழகத்தின் மாணவராயிருந்த எட்வர்டு ஸ்பென்சர் அந்தத் துன்ப நிகழ்ச்சியின் வீரர்களில் ஒருவராயிருந்தார். என்ன நடந்தது என்பதை உணர்ந்த ஸ்பென்சர் மிச்சிக்கன் ஏரியின் குளிர்ந்த*

நீருக்குள் குதித்து மூழ்கிக் கொண்டிருந்த பயணிகளை நோக்கி நீந்திச் சென்றார். அவர்களில் ஒருவரை இவர் பிடித்துக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டு, இன்னொருவரை இழுத்து வர உடனடியாகத் திரும்பிச் சென்றார். எட்வர்டு ஸ்பென்சர் தன்னந்தனியாளாக அந்த இரவில் பதினேழு பேரைக் காப்பாற்றினார். ஆனால் இவர் தனது வீரத்திற்கு மிக உயர்ந்த விலையொன்றைச் செலுத்த வேண்டியதாயிற்று. அந்த அனுபவத்தின் கடின உழைப்பானது அவருக்குச் சித்தபிரம்மை ஏற்படச் செய்து, அவர் எஞ்சியிருந்த தம் வாழ்நாள் முழுவதிலும் ஒரு சக்கர நாற்காலியிலேயே இருக்கும்படி செய்து விட்டது. இவரது எண்பதாவது பிறந்த நாளின் போது இவரைப் பேட்டி கண்டவர்களில் ஒருவர், விதிவசமான அந்த நாள் பற்றிய இவரது மிகத் தெளிவான நினைவு என்ன என்று கேட்டார்கள். அதற்கு இவர், "அந்தப் பதினேழு பேரில் ஒருவர் கூட எனக்கு நன்றி தெரிவிக்கத் திரும்பி வரவில்லை" என்று பதில் அளித்தார்.

பிறருக்கு நாம் நன்றியடைமையை செயல்விளக்கப்படுத்த நாம் சாதாரணமாகத் தவறி விடுவதை நாம் யாவரும் ஒப்புக் கொள்வோமாக. அடிக்கடி நாம் நன்றியுடைமையை உணர்ந்து நமது பாராட்டுதலை வெளிப்படுத்த விரும்பியிருக்கலாம், ஆனால் நாம் அமைதி காத்து, உணரப்பட்ட நன்றியுடைமையை ஒருக்காலும் வெளிப்படுத்தாமல் இருந்து விடுகின்றோம்!

நன்மையை நினைவுபடுத்திக் கொள்ளவும், நம் வாழ்வில் நன்மையைக் கொண்டு வந்தவர்களுக்கு நன்றியுள்ளவர்களாய் நிலைத்திருக்கவும் நாம் தீர்மானம் செய்து கொள்வோம். எல்லாருக்கும் மேலாக, நாம் தேவனுக்கு முதலில் நன்றியுடைமையை வெளிப்படுத்த நினைவுகூருவோம்:

> கர்த்தர் எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன் (சங். 13:6).

> கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால், என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன் (சங். 28:7).

நாம் யாவரும் நம் குடும்ப உறுப்பினர்களுக்கும் (அதாவது, பெற்றோர், பிள்ளைகள், தாத்தா பாட்டிகள் ஆகியோருக்கு); சபையாகிய தேவனுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு; மற்றும் நமக்கு நற்செயல் செய்கின்ற நம் சமூக உறுப்பினர்களுக்கு நன்றியுடைமையைக் காண்பிப்போமாக.

## முடிவுரை

நன்றியுடைமை என்பது வெளிப்படுத்தப்பட்டாக வேண்டிய ஒழுக்க ரீதியான கட்டுப்பாடாக உள்ளது. நன்றியுடைமையை வெளிப்படுத்தாமல் இருப்பது ஒரு பாவமாக உள்ளது. யாபேஸின் மக்களின் நன்றியுடைமையை நீங்கள் வளர்த்துக் கொள்ளும் போது, மகிழ்வினால் நிரப்பப்

*பட்ட அற்புதமான நபராவீர்கள்; நீங்கள் உங்கள் வாழ்க்கையையெல்லாம் அனுபவிப்பீர்கள்; நீங்கள் அதிகமான நண்பர்களைப் பெற்றிருப்பீர்கள்; பிறர் உங்களுக்கு அதிகமாய் (நன்மை) செய்கின்றதை நீங்கள் காண்பீர்கள்; ஊழியத்தில் நீங்கள் உங்களையே இழந்து உண்மையான மகிழ்வைக் கண்டடைவீர்கள்!*

*இவ்வளவு அதிகமானவர்களிடமிருந்து இவ்வளவு அதிகமானவற்றைப் பெற்றுக் கொண்டு, இவர்களின் நற்தன்மையை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது! தயவு செய்து நன்றியுடைமையை வெளிப்படுத்த நினைவு கொள்ளுங்கள். இதை இவ்வாரத்திலேயே செய்யுங்கள்! (1 தெச. 5:18).*